# கொட்டுமுரசே

---

**Que.1. நம் தமிழ் மொழி இனிமையுடைய மொழி, இலக்கண வரம்புடைய மொழி செந்தமிழ்………… என்ற அடைமொழிகளில் அழைக்கிறோம். நாம் அழைக்கும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.**

**Ans.** பைந்தமிழ், மென்றமிழ், இன்றமிழ், முத்தமிழ்.

**Que.2. பத்மநாபபுரம் அரண்மனையின் மூலிகைக் கட்டில் 63 மூலிகை மரத்துண்டுகளால் ஆனது. இக்கூற்று சரியா தவறா என எழுதுங்கள்.**

**Ans.** தவறு

**Que.3. அதிசய மாளிகை பாடத்தில் பத்மநாபபுரம் அரண்மனையின் அழகினையும் அதன் கலை நுணுக்கங்களையும் கற்றுணர்ந்த நீங்கள் அவ்வரண்மனையை நேரில் பார்வையிட களப்பயனம் மேற்கொள்ள விரும்புகிறீர்கள். வகுப்புத் தலைவரான நீங்கள் தலைமையாசிரியரிடம் அனுமதிகேட்டுக் கடிதம் எழுதுங்கள்.**

**Ans.** அமைப்பு 1

பாடப்பகுதியோடு இணைந்த கருத்து விளக்கம் 2

மொழிநடை 1

**Que.4. பத்மநாபபுரம் அரண்மனையில் ஒரே நேரத்தில் 2000 பேர் அமர்ந்து உணவு உண்ணுமளவுக்கு நீளமாகவும் அகலமாகவும் இருந்த அறை…………….**

**Ans.** ஊட்டுபுரை

**Que.5. விடுதலைக்கு முன்பு கேரள மாநிலம் ………….., ………….., ………….. என மூன்று தனித்தனி நாடுகளாயிருந்தன.**

**அ) திருவிதாங்கூர், கொச்சி, கன்னியாகுமரி**


**ஆ) திருவிதாங்கூர், கோவா, மலபார்**

**இ) திருவிதாங்கூர், மலபார், பாண்டிச்சேரி**

**ஈ) திருவிதாங்கூர், கொச்சி, மலபார்**

**Ans.** ஈ) திருவிதாங்கூர், கொச்சி, மலபார்

**Que.6.**




**இந்த ஓணவிழா வாழ்த்து அட்டையைப் போன்று பொங்கல் விழா வாழ்த்து அட்டை ஒன்றைத் தயாரியுங்கள்.**

**இந்த ஓணவிழா வாழ்த்து அட்டையைப் போன்று பொங்கல் விழா வாழ்த்து அட்டை ஒன்றைத் தயாரியுங்கள்.**

**Ans.** வடிவம் 1

கவரும் தன்மை 1

வாழ்த்துச் செய்தி 1

**Que.7. ஆகஸ்ட் 31-ஆம் தேதியன்று பள்ளிக்கூடத்தில் ஓணவிழா நடைபெற உள்ளது. தலைமையாசிரியரின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரபல நடனக் கலைஞர் ஷோபனா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கிறார். திருவாதிரை, புலிக்களி, செண்டமேளம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெ உள்ளன. மாணவிகளின் ஓணப்பாட்டும் இடம்பெறும். இவ்விழாவுக்கான நிகழ்ச்சி நிரலை எழுதுங்கள்.**

**Ans.** வடிவம், வரிசை முறை 2

அனைத்து நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு 1

**Que.8. பாரம்பரிய கலைகள் நலிவடைந்துவரும் இன்றைய சூழ்நிலையில் இக்கலைகளைப் பாதுகாக்க நீங்கள் கூறும் வழிமுறைகளைப் பட்டியலிடுங்கள்.**

**Ans.** மாணவர்கள் கூறும் பரிந்துரைகளில் நான்கு கருத்துக்கள்

**Que.9. பள்ளிக்கூட அளவிலான கலைவிழாவைப் பற்றித் திட்டமிட, அனைத்து வகுப்பு மாணவர்த் தலைவர்களும் இணைந்த கூட்டம் அலுவலக அறையில் வைத்து நடைபெற உள்ளது. பள்ளி மாணவர்த் தலைவர் என்ற பொறுப்பில் இருக்கும் நீங்கள் இதற்கான சுற்றறிச்கை தயாரியுங்கள்.**

**Ans.** இடம், தேதி, நேரம் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களையும்

உட்படுத்துதல் 2

முறையான அறிவிப்பு 1

**Que.10. உங்கள் பள்ளியில் ஓணவிழாவை ஒட்டி நடைபெறும் கலைநிகழ்ச்சிகளையும் அத்தப்பூக்கொலங்களையும் கண்டுகளிக்கப் பெற்றோருக்கும் பொதுமக்களுக்கும் அழைப்பு விடுக்கும் பொருட்டு அறிவிப்புத் தயார் செய்யுங்கள்.**

**Ans.** வடிவம் 1

செய்தி 2

**Que.11. மார்கங்களி, திருவாதிரைக்களி ஆகியவை கேரளாவின் பாரம்பரியக் கலைகள். இக்கலைகளின் தனித்தன்மைகளின் அடிப்படையில் இந்த அட்டவணையைப் பூர்த்தியாக்குங்கள்.**

| **திருவாதிரை** | **மார்கங்களி** |
|---|---|
| **பெண்கள் மட்டுமே ஆடுவர்<br>(அ)……………………….<br>(இ) ………………………<br>கேரளப் பாரம்பரிய உடை அணந்து ஆடுவர்** | **(அ)………………………….<br>வட்டமாக நின்று ஆடுவர்<br>தோமாஸ்லீஹாவின் வரலாறு<br>(ஈ)…………………………..** |

**Ans.** அ) பெண்களும் ஆண்களும் ஆடுவர்

ஆ) வட்டமாக நின்று ஆடுவர்

இ) சிவபெருமான் பார்வதி திருமணம்

ஈ) கிறிஸ்தவப் பாரம்பரிய உடை

**Que.12. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இருக்காது”**

**- இப்பழமொழியை விளக்கி எழுதுங்கள்.**

**Ans.** பழமொழியைப் புரிதல் 1

பொருத்தமான விளக்கம் 2

**Que.13. திருவாதிரைக் களியின் வேறு பெயர்…………….**

**அ) மார்கங்களி ஆ) கைகொட்டிக்களி இ) வள்ளங்களி ஈ) புலிக்களி.**

**Ans.** ஆ) கைகொட்டிக்களி

**Que.14.  “தென்னை மரங்களினை கதகளி ஆடவிட்டு**

**மிளகுக் கொடிகளொடு**

**கண்ணாமூச்சி ஆடிவா”**

**இக்கவிதை வரிகள் நம் மாநிலத்தின் பசுமையை வெளிப்படுத்துகிறது. கேரளம் கடவுளின் சொந்த நாடு எனப் பெருமிதம் கொள்கிறோம். அதற்கானக் காரணங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**மதிப்பீட்டுக் குறிப்பு:**

**Ans.** கேரளத்தின் வளங்கள் 2

மொழிநடை 1

**Que.15. 'கதகளியும் கவின்கலையும் கை கோர்த்திட – மக்கள்**

**கவிமழையால் மனம் மகிழக் கவிபாடிட**

**தெய்யமும் திரயெல்லாம் சுதி சேர்த்திட – மக்கள்**

**திருவாதிரை களித்திங்கு உறவாடிட**

**ஓட்டம் துள்ளல் ஆடி மக்கள் – உவகை கொண்டிட – நல்ல**

**மோகினி ஆட்டமாடி மோகம் கொண்டிட – நாளும்**

**மோகத்திலே மக்கள் உள்ளம் தாவிக்களித்திட'**

**இப்பாடலில் இடம்பெறும் கேரளக்கலைகளை வரிசைப்படுத்துங்கள்.**

**Ans.** கதகளி, தெய்யம், திருவாதிரை, ஓட்டம், துள்ளல், கூடி ஆட்டம், மோகினி ஆட்டம்.

**Que.16.**



**இக்கலையைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** மார்கங்களி 1

ஆடை அலங்காரம் 1

நிகழ்த்தும் முறை 1

**Que.17. கேரள நாட்டின் திருவாதிரைக் களியைத் தமிழ்நாட்டின் கும்மியுடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** கும்மி மற்றும் திருவாதிரைக் களி பற்றிய அறிவு 2

தொடர்புபடுத்தி எழுதுதல் 1

**Que.18. மலப்புறம் மாவட்டத்தில் திருமண நற்சடங்குகளின் ஒரு பகுதியாக நடைபெறும் ஒப்பனைபற்றி விளக்கக் குறிப்பு எழுதுக. (குறிப்பு: நிகழ்த்தும் முறை – ஆடை அலங்காரம் – பின்னணிப் பாடல்)**

**Ans.** ஒப்பனை – அலங்காரம் – நிகழ்த்தும் முறை.

**Que.19. "வைகை பெருகிவரப்**

**பெரியாற்றில் தேங்கிநின்றாய்**

**கோவை களைப்பாறச்**

**சிறுவாணியால் விசிறினாய்**

**பரம்பிக் குளத்தால் நெஞ்சில்**

**பச்சை பிடிக்க வைத்தாய்."**

**- சிற்பி பாலசுப்பிரமணியம்.**

**இப்பாடலை நயம்பாராட்டி எழுதுக.**

**Ans.** சொல்நயம் - எதுகை, மோனை இயைபு. (1)

கருத்து நயம் (2)

மையக்கருத்து (1)

மொழிநடை (1)

**Que.20. பொருத்துக:**

**அ) சேரமான்பெருமாள் - (i) துள்ளல்**

**ஆ) பாலக்காட்டு மணி - (ii) சிறுவாணி**

**இ) எரிமேலிபேட்டை - (iii) ஆதியுலா**

**ஈ) கோவை - (iv) மிருதங்கம்**

**Ans.** அ) சேரமான்பெருமாள் - (iii) ஆதியுலா

ஆ) பாலக்காட்டு மணி - (iv) மிருதங்கம்

இ) எரிமேலிபேட்டை - (i) துள்ளல்

ஈ) கோவை - (ii) சிறுவாணி

**Que.21. கொடுக்கப்பட்ட கவிதையினை வாசித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**“சாதி இருட்டைத் தகர்த்த**

**கேரளத்து ஞாயிறு**

**ஸ்ரீநாராயன குருவின்**

**தேவாரங்களளோடு**

**குருவின் ஆத்ம தரிசனக் கண்ணாடியாய்**

**மலையாளக் கவிதையில் பிரதிஷ்டையான**

**குமாரன் ஆசானின் சிம்ம கர்ஜனையையும்**

**ஏந்தி வந்து தந்தாய்”**

**அ) ‘கேரளத்து ஞாயிறு’ என்று அழைக்கப்படுபவர் யார்?**

**ஆ) மலையாளக் கவிதையில் பிரதிஷ்டையான கவிஞர் யார்?**

**Ans.** அ) ஸ்ரீநாராயணகுரு.

ஆ) குமாரன் ஆசான்.

**Que.22. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.**

**அ) திருமலைநாயக்கர் அரண்மனை, திருமலைநாயக்கர் மகால் என அழைக்கப்படுகிறது.**

**ஆ) ஆங்கிலேயக் கட்டிடக்கலைஞர் ஒருவரால் வடிவமைக்கப்பட்டது.**

**இ) இந்த அரண்மனை மூன்று பகுதிகளைக் கொண்டது.**


**ஈ) இவ்வரண்மனை இந்தோசரசனிக் பாணியில் வடிவமைக்கப்பட்டது.**

**உ) உப்பரிகை மாளிகை மூன்றுமாடிகளாக அமைந்துள்ளது.**

**Ans.** அ) திருமலைநாயக்கர் அரண்மனை, திருமலைநாயக்கர் மகால் என அழைக்கப்படுகிறது.

ஈ) இவ்வரண்மனை இந்தோசரசனிக் பாணியில் வடிவமைக்கப்பட்டது.

**Que. 23.**



**பத்மநாபபுரம் அரண்மனையின் மரவேலைப்பாடுகளைக் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

**Ans.** பூ வேலைப்பாடுகள் (1)

மூலிகைக்கட்டில் விளக்கம் (1)

கட்டிட அமைப்பு (1)

**Que. 24. பத்மநாபபுர அரண்மனை பற்றி அதிசய மாளிகை பாடப்பகுதிவழிக் கற்ற நீங்கள் அதன் தனித்தன்மைகள் அமைப்புப் பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுகங்கள்.**

**Ans.** வடிவமைப்பு (1)

அரண்மனை அமைப்பு (1)

சிறப்புத்தன்மைகள் (2)

**Que. 25. அதிசய மாளிகை வாயிலாகப் பழங்கால கட்டிடக்கலையைப் பற்றிக் கற்றறிந்த நீங்கள் கீழ்க்காணும் குறிப்புகளின் அடிப்படையில் 'கேரள கட்டிடக்கலை' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்பு:- வடிவமைப்பு – கலைத்திறன் – உறுதித்தன்மை – மரவேலைப்பாடு – சித்திரவேலைப்பாடு.**

**Ans.** வடிவம் (1)

கருத்துக் குறிப்புகளின் அடிப்படையில் கருத்துக்கள் தொகுத்தல். (4)

**Que. 26. சரியான விடையைத் தேர்வு செய்யுங்கள்.**

**பத்மநாபபுரம் அரண்மனையின் பெயர்க்காரணம்.**

**அ) திருவிதாங்கூர் அரசர்கள் பத்மநாபனின் மேல்கொண்ட பக்தி மிகுதியால் அப்பெயர் வைத்தனர்.**

**ஆ) திருவிதாங்கூர் மக்கள் தங்கள் அரசர்களை விரும்பினபடியால் நாட்டுக்கு அப்பெயர் வைத்தனர்.**

**இ) கொச்சி ராஜிய அரசர்கள் திருவிதாங்கூர் அரசர்களிடம் கொண்ட நட்பின் மிகுதியால் அப்பெயர் வைத்தனர்.**

**Ans.** அ) திருவிதாங்கூர் அரசர்கள் பத்மநாபனின் மேல்கொண்ட பக்தி மிகுதியால் அப்பெயர் வைத்தனர்.

**Que. 27. 'ஐயா! இங்கு பல கட்டடங்கள் இருந்தாலும், கீழே இறங்காமலேயே எல்லா கட்டடங்களையும் பார்த்து விட்டோமே' – இது அதிசய மாளிகையைக் கண்ட ஒரு மாணவனின் கூற்று. பத்மநாபபுர அரண்மனைக் கட்டடக்கலையின் இத்தனித் தன்மைக்கான காரணங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** அரண்மனை பற்றிய விளக்கம்.

முக்கியக் கட்டடங்கள்.

கட்டடங்களின் இரண்டாவது மாடி ஒன்றோடொன்று தொடர்பு கொண்ட கட்டட அமைப்புப் பற்றிய விளக்கம்.

வரிசைப்படுத்தும் முறை, மொழிநடை.

**Que. 28. முட்டைக்கரு, கரிப்பொடி, எண்ணெய், சுண்ணாம்பு, கருங்கல், செங்கல்.**

**மேற்குறிப்பிட்ட பொருட்களில் எதைப் பயனபடுத்தி பத்மநாபபுரம் அரண்மனையின் தரை உருவாக்கப்பட்டது. வரிசைப்படுத்தி எழுதுங்கள்.**

**Ans.** முட்டைக்கரு, கரிப்பொடி, எண்ணெய்.

**Que. 29. பொருத்தி எழுதுங்கள்**

**அ) இலைத்தளம் - (i) நடுப்பகுதி பருமன் குறைந்தது**

**ஆ) கொம்பு - (ii) வண்ணக் குஞ்சரங்கள் தொங்குவது**

**இ) திமிலை - (iii) கைமணி போன்ற உருவ அமைப்பு**

**ஈ) இடைக்கா - (iv) வாய்ப்பகுதி வளைந்த அமைப்பு**

**Ans.** அ) இலைத்தளம் - (iii) கைமணி போன்ற உருவ அமைப்பு

ஆ) கொம்பு - (iv) வாய்ப்பகுதி வளைந்த அமைப்பு

இ) திமிலை - (i) நடுப்பகுதி பருமன் குறைந்தது

ஈ) இடைக்கா - (ii) வண்ணக் குஞ்சரங்கள் தொங்குவது

**Que. 30. திருச்சூர் பூரத்துடன் தொடர்புடைய விலங்கு**

**அ) குதிரை ஆ) பசு இ) யானை ஈ) புலி.**

**Ans.** இ) யானை

**Que. 31. பின்வருவனவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.**

**அ) திருச்சூர் பூரம் மார்ச் மாதம் நடைபெறுகிறது.**

**ஆ) திருச்சூர் பூரம் ஏப்பிரல் மாதம் நடைபெறுகிறது.**

**இ) திருச்சூர் பூரம் மே மாதம் நடைபெறுகிறது.**

**ஈ) திருச்சூர் பூரம் ஜுன் மாதம் நடைபெறுகிறது.**

**Ans**. இ) திருச்சூர் பூரம் மே மாதம் நடைபெறுகிறது.

**Que. 32. கோயில்களிலும் விழாக்களிலும் இசைக்கப்படுகின்ற பஞ்சவாத்தியக் கருவிகளைப் பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.**

**Ans.** ஐவகை இசைக்கருவிகளின் தொகுப்பு (1)

இலைத்தளம், கொம்பு, மத்தளம் (1)

இசைக்கருவிகள் பற்றிய கருத்துக்கள் (2)

**Que. 33. பொருத்துக:**

**அ) துளைக்கருவி - (i) வீரமத்தளம்**

**ஆ) சிங்கி - (ii) தொப்பி மத்தளம்**

**இ) சுத்தநாதம் - (iii) கொம்பு**

**ஈ) அடைப்பு ஒலி - (iv) இலைத்தளம்**

**Ans.** அ) துளைக்கருவி - (iii) கொம்பு

ஆ) சிங்கி - (iv) இலைத்தளம்

இ) சுத்தநாதம் - (i) வீரமத்தளம்

ஈ) அடைப்பு ஒலி - (ii) தொப்பி மத்தளம்

**Que. 34. சுத்த நாதமும் அடைப்பு ஒலியும் முழக்கும் இருவகை மத்தளங்களின் பெயர்களை எழுதுங்கள்.**

**Ans.** வீரமத்தளம், தொப்பி மத்தளம்

**Que. 35. இலைத்தாளம் தமிழ்நாட்டின் ……….. என்ற இசைக்கருவியோடு தொடர்புடையது?**

**(அ) சிங்கி (ஆ) யாழ் (இ) பறை (ஈ) நாதஸ்வரம்.**

**Ans.** (அ) சிங்கி (ஜால்ரா)

**Que.36. அ) இப்படத்தில் காணும் இசைக்கருவி எது?**

**ஆ) இவ்விசைக்கருவி குறித்து சிறு குறிப்பு எழுதுக.**



**Ans.** அ) இடைக்கா - (1)

ஆ) பாரம்பரிய இசைக்கருவி, கோவில் வழிபாடுகளில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இலகுவான சிறு கம்புகளால் வட்ட வடிவமான வாய்ப்பகுதியில் தட்டி இசை எழுப்பப்படும். நூல் உருளை குஞ்சலங்கள் – தோல்க்கருவி. – (2)

**Que.37. கீழ்க்காணும் அட்டவணையை நிரப்புங்கள்.**

| **பண்டைய இசைக்கருவிகள்** | **நவீன இசைக்கருவிகள்** |
|---|---|
| **இலைத்தாளம்**<br>**கொம்பு**<br>**………………..**<br>**………………..** | **வயலின்**<br>**சித்தார்**<br>**………………..**<br>**………………..** |

**Ans.** இடைக்கா, மத்தளம், திமிலை இவற்றுள் ஏதேனும் இரண்டு (1)

சித்தார், ட்ரம்செட் (1)

**Que.38. திருச்சூர்ப் பூரத்தைப் பற்றி பாடப்பகுதி வாயிலாகக் கற்ற நீங்கள் இவ்விழாவின் ஆரம்பச் சடங்குகள், யானைகளின் அணிவகுப்பு, கண் கவர் வாணவேடிக்கை, குடைமாற்றம் ஆகிய நிகழ்வுகளை விளக்கி உங்கள் நண்பனுக்குக் கடிதமாக எழுதுங்கள்.**

**Ans.** அமைப்பு 1

குறிப்புகள் குறித்த கருத்துவிளக்கம் 2

மொழிநடை 1

**Que.39. கேரளாவின் கலாச்சார நகரம்……………..**

**அ) இடுக்கி ஆ) பாலக்காடு இ) திருச்சூர் ஈ) திருவனந்தபுரம்.**

**Ans.** இ) திருச்சூர்

**Que.40. வ்வாண்டுக்கான திருச்சூர்ப் பூரம் மே மாதம் வடக்குநாதன் கோயிலில் வைத்து நடைபெற்றது. யானைகளின் அணிவகுப்பு,**

**பஞ்சவாத்திய மேளம், பூரத்திருவிழா வழிபாடுகள் போன்றவை முறையாக நடைபெற்றன. முக்கியமான குடைமாற்றம் மற்றும் வாணவேடிக்கை போன்றவை வெகு சிறப்பாக நடைபெற்றன. – இத்தகவல்களை ஒருங்கிணைத்துப் பத்திரிகைச் செய்தி எழுதுங்கள்.**

**Ans.** வடிவம்

நடைபெற்ற அணிவகுப்பு, இசைக்கருவிகள்.

வழபாடுகள் பற்றிய தகவல்களின் விளக்கம்.

மொழிநடை.

**Que.41. கொடுக்கப்பட்ட பகுதியினை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**திருச்சூர்ப் பூரத்தில் மிகவும் குறிப்பிட வேண்டிய நிகழ்வே குடைமாற்றம், திருவம்பாடி கோவில் தேவியும், பாறமேகாவு கோவில் தேவியும் நேருக்குநேர் சந்தித்துக்கொள்ளும் ஒரு நிகழ்ச்சியாக இது கருதப்படுகிறது. அலங்கரிக்கப்பட்ட யானைகள் மேல் அமர்ந்து வண்ண வண்ணக் குடைகளை மாற்றி மாற்றி உயர்த்திக் காட்டி ஒரு போட்டி போல் இரு கோவில் சபைகளும் இதை நடத்தும்.**

**அ) திருச்சூர்ப் பூரத்தில் குறிப்பிடவேண்டிய மிக முக்கியமான நிகழ்வு யாது?**

**ஆ) இவ்விழாவில் இடம்பெறும் விலங்கு யாது?**

**இ) இதில் குறிப்பிடப்படும் இரண்டு கோவில்களின் பெயர்களை எழுதுங்கள்?**

**Ans.** அ) குடைமாற்றம்

ஆ)யானை

இ) திருவம்பாடி கோவில், பாறமேகாவு கோவில்.

**Que.42. 200 ஆண்டுகள் பழமையான விழாவே திருச்சூர்ப் பூரம். கேரளாவில் மிகவும் பிரசித்தி பெற்ற இவ்விழாவினைக் குறித்து விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** பூரம் பற்றிய கருத்துக்கள்

குடைமாற்றம், வாணவேடிக்கை,

அலங்கரிக்கப்பட்ட யானை வலம்

தொடர்புடைய கோவில்கள்

**Que.43. கேரள மாநிலத்தில் மிகப்பெரிய அளவில் வானவேடிக்கையுடன் நடைபெறும் கோயில் விழாவை எழுதுங்கள்.**

**Ans**. திருச்சூர்ப் பூரம்

**Que.44. திருச்சூரில் மே மாதம் பூரம் நட்சத்திர நாளன்று நடைபெறும் பூர விழாவிற்குப் பள்ளி மாணவர்களை அழைத்துச் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. மாணவர்த் தலைவரான நீங்கள், இப்பயணத்தில் கலந்துகொள்ளும் மாணவர்களின் பெயர்களை வகுப்பு ஆசிரியரிடம் பதிவு செய்யும்படி அறிவிப்பு கொடுக்க வேண்டும். இதற்கான சுற்றறிக்கை தயார் செய்யுங்கள்.**

**Ans.** வடிவம்

செய்திச் சுருக்கம்

**Que.45. சரியான விடைகளைத் தேர்வு செய்து எழுதுங்கள்.**

**(i) திருச்சூர்ப் பூரம் ஏப்பிரல் மாதம் நடைபெறுகிறது.**

**(ii) அதிகாலைப் பொழுதில் வாண வேடிக்கை நடைபெறும்.**

**(iii) திருச்சூர்ப் பூரத்தில் அலங்கரிக்கப்பட்ட யானைகள் குருவாயூரைச் சுற்றி வலம் வரும்.**

**(iv) பூமி பூஜை, கால்கோள் எடுத்தல் முதலிய சடங்குகள் பூரத் திருவிழாவிற்கு முன் நடத்தப்படும்.**

**(அ) கூற்று (i)( iii) சரி (ஆ) கூற்று (ii)( iv) சரி**

**(இ) கூற்று (ii)( iii) தவறு (ஈ) கூற்று (ii)( iv) தவறு.**

**Ans.** (ஆ), (இ)

**Que.46. திருச்சூர் பூரம் நடைபெறும் கோயிலின் பெயர் எழுதுக**

**அ) கொடுங்ஙலூர் ஆ) குருவாயூர்**

**இ)கூடல் மாணிக்கம் ஈ) வடக்குநாதன்**

**நடைபெறும் கோயிலைத் தேர்வு செய்து எழுதுங்கள்.**

**Ans.** ஈ) வடக்குநாதன்

**Que.47. உரையாடலைப் பூர்த்தி செய்யுங்கள்.**

**நண்பன் : ஏ நண்பா! எங்கு போய்விட்டு வருகிறாய்?**

**மாணவன் : திருச்சூர் பூரம் பார்க்கப் போனேன்.**

**நண்பன் : திருச்சூர் பூரமா? எனக்குத் தெரியாதே.**

**அதைப் பற்றிக் கொஞ்சம் கூறேன்.**

**மாணவன் : திருச்சூர் பூரம் (அ)………………………………………………..**

**நண்பன் : குடை மாற்றமா? அது என்ன?**

**மாணவன் : திருவம்பாடி கோயில் தேவியும் (ஆ)……………………………..**

**நண்பன் : எந்தெந்த கருவிகளை இசைத்தார்கள்?**

**அது அவ்வாறிருந்தது?**

**மாணவன் : (இ)…………………………………………………………………**

**நண்பன் : அப்படியா? எத்தனை யானைகள் அணிவகுத்திருந்தன?**

**மாணவன் : (ஈ)…………………………………………………………………**

**Ans.** அ) 200 ஆண்டுகள் தொன்மை – எட்டு பூரங்கள் – வடக்குநாதன் கோயில் – வழிபாடுகள் – குடைமாற்றம்.

ஆ) பாறமேகாவு கோவில் தேவியும் சந்திப்பு – யானைகள் மேல் அமைந்து வண்ணக் குடைகளை உயர்த்துதல் – வெண்சாமரம், ஆலவட்டம் உயர்த்தல்.

இ) பஞ்ச வாத்தியக்கருவிகளின் ஒத்திசை சிறப்பாக இருக்கும்.

ஈ) ஐத்பதற்கும் மேற்பட்ட யானைகள் – அலங்காரம் – அணிவகுப்பு – திருச்சூர் நகரைச் சுற்றி வலம்.

**Que.48. காணாம்போண பூரம் பறஞ்சு அறியிக்கணோ" – இது திருச்சசூர்ப்பூர விழாவின் சிறப்பினை மிகைப்படுத்திக் கூறப்படும் பழமொழி. இதன் தமிழாக்கம் எழுதுங்கள்.**

**Ans.** காணப்போகும் பூர விழாவைச் சொல்லித் தெரிய வேண்டுமோ.